Registered as a Newspaper

பக்கங்கள் 12
விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 109

வியாழக்கிழமை
14 மார்ச் 2024

பங்குனி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"எங்கட இனத்தின்ர விடுதலைக்கு கொள்ளிக்கட்டை வைச்ச உந்தப்பெரிய நாட்டுக்கு முட்டுக்கட்டை போடுறது பெரிய வேலையில்லை பாருங்கோ"

முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார்

# விடுதலைக்கு முட்டுக்கட்டை!

## சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டுக்கு இந்தியா மறுப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 14**

**இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டபோதும், திருச்சி சிறப்பு முகாமில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முருகன், ரொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரின் விடுதலையில் இந்திய ஒன்றிய அரசு தொடர்ந்தும் முட்டுக்கட்டை போட்டுவருகின்றது.**

11

வட்டுக்கோட்டையில் இளைஞர் கொலை



## இரத்தக்கறையுடன் கார் அராலியில் நேற்று மீட்பு!

யாழ்.மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவு துரித விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையில் இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில், சந்தேகநபர்கள் பயன்படுத்திய கார் இரத்தக்கறைகளுடன் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

11



## பண்ணைக் கடலுக்குள் பாய்ந்த பொலிஸ் ஓட்டோ

யாழ்ப்பாணம், மார்ச் 14

வேகக்கட்டுப்பாட்டை இழந்த கோப்பாய்ப் பொலிஸாரின் முச்சக்கரவண்டி பண்ணைக் கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

10

வெடுக்குநாறிமலை விவகாரம்;

## கைதானோர் நேற்றுமுதல் நீதிகோரி உணவு தவிர்ப்பு!

வவுனியா, மார்ச் 14

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மகாசிவராத்திரி தினத்தில் வழிபாடுகளை மேற்கொண்டபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 8 பேரில் 5 பேர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

11

## வெள்ளை ஈயை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி



யாழ்ப்பாணம், மார்ச் 14

தென்னைகளில் தற்போது பரவிவரும் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த விவசாயத் திணைக்களத்தால் "என்காசியா ஹோடிலொப்பே" எனும் ஒட்டுண்ணி விடப்பட்

10

## 'எட்காவுக்கு' எதிராக பிக்குகள் போர்க்கொடி

கொழும்பு, மார்ச் 14

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே கைச்சாத்திடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 'எட்கா' உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து விசேட சங்க சபைக் கூட்ட

11

யாழ். பல்கலையின் 38ஆவது

## பட்டமளிப்பு விழா இன்று ஆரம்பம்!



யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவதுபகுதி இன்று ஆரம்பமாகி நாளையும், நாளைமறுதினமும் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் 9 அமர்வுகளாக

11

## நெல் மூடைகளுடன் தடம்புரண்ட ஹன்ரர்

ஒருவர் காயம்

வவுனியா, மார்ச் 14

வவுனியா, புளியங்குளத்தில் நெல் மூடைகளை ஏற்றிச் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

முல்லைத்தீவிலிருந்து நெல் மூடைகளை ஏற்றிக்கொண்டு வவுனியா நோக்கிப் பயணித்த ஹன்ரர் ரக வாகனமே வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. வாகனத்தின் முன்சக்கரம் வெடித்தே இந்த விபத்து நடந்துள்ளது.

10

## இலங்கையில் படைத்தளம் ஆராய்கின்றது சீனா!

கொழும்பு, மார்ச் 14

இலங்கை உட்பட பல நாடுகளில் இராணுவக் கட்டமைப்புகளை ஏற்படுத்துவது குறித்து சீனா ஆராய்ந்து வருகின்றது என அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் தமது சமீபத்தைய அறிக்கையில் எச்சரித்துள்ளனர்.

ஜிபுட்டியில் உள்ள அதன் இராணுவத்தளத்தையும் கம்போடியாவில் உள்ள அதன் கடற்படைத் தளத்தையும் மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சீனா இதற்கு அப்பால் இலங்கை உட்பட பல நாடுகளில் தனது தளங்களை உருவாக்க முயல்கின்றது என அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினர் அந்த அறிக்

10

கிளிநொச்சி – பொன்நகரில்

## டிப்பரோடு மோதி ஒருவர் மரணம்

கிளிநொச்சி, மார்ச் 14

கிளிநொச்சி, பொன்நகரில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகனமும், மோட்டார்சைக்கிளும் மோதி விபத்து நடந்துள்ளது. மோட்டார்சைக்கிளில் பயணித்த, பொன்நகரைச் சேர்ந்த சந்தானம் புஸ்பராசா (வயது-34) என்பவரே உயிரிழந்துள்ளார்.

09

## கூரையைப் பிய்த்து வீழ்ந்த 50 கிலோப் பனிக்கட்டி!

கொழும்பு, மார்ச் 14

நாடே கடும் வெப்பத்தில் தகித்துக்கொண்டிருக்கும் நிலையில், வீடொன்றின் கூரையைப் பிய்த்துக்கொண்டு 50 கிலோ பனிக்கட்டி ஒன்று வீழ்ந்துள்ளமை மக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

மெதகம, ஹாலி - எல பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் கூரையைப் பிய்த்துக்கொண்டே இந்தப் பனிக்கட்டி வீழ்ந்துள்ளது.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்பள முரண்பாட்டை உடன் களையுங்கள்!

## தொடர் போராட்டத்தில் கல்விசாரா ஊழியர்கள்

கொழும்பு, மார்ச் 14
சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களால் நேற்றும் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற கலந்துரையாடலில் பல்கலைக்கழகங்களில் சம்பளக் குறைப்பு சரி செய்யப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆயினும் இதுவரை சரி செய்யப்படவில்லை. இதையடுத்தே, தமது கோரிக்கைகளை நிவர்த்திக்கவேண்டும் என வலியுறுத்தி அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். இந்தப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-இ)

## கசிப்புடன் பலமுறை கைது:

# 19 வயது இளைஞனுக்கு தண்டமும் சிறையும்

யாழ்ப்பாணம், மார்ச் 14
கோப்பாய்ப் பொலிஸ் பிரிவில் உடைமையில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 19 வயது இளைஞனுக்கு 50 ஆயிரம் ரூபா தண்டமும் 9 மாத சிறைத்தண்டனையும் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டான்.

இதன்போது சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் 9 மாத சிறைத்தண்டனை இல்லாதவிடத்து 300 மணித்தியாலங்கள் சமூகசேவையில் ஈடுபடவேண்டும் என்றும் யாழ்ப்பாண மேலதிக நீதிவான் லெனின் குமார் உத்தரவிட்டார்.

இதேவேளை - குறித்த இளைஞன் ஏற்கனவே கசிப்பு வழக்குகளில் கைதுசெய்யப்பட்டு தண்டம் அறவிடப்பட்டு விடுவிக்கப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-26)

## மாந்தை கிழக்கு மாணவர்கள்

# ஆரம்பக் கல்வியுடன் இடைவிலகும் அவலம்

## உட்கட்டமைப்பின்மையே பிரதான காரணம்

**முல்லைத்தீவு, மார்ச் 14**
**மாந்தை கிழக்கைச் சேர்ந்த மாணவர்கள் ஆரம்பக் கல்வியுடன் இடைவிலகும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன என்று அந்தப் பகுதி பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.**

மாந்தை கிழக்கிலுள்ள சிறாட்டிக்குளம், பாலைப்பாணி ஆகிய பாடசாலைகளில் ஆரம்பக்கல்வியை நிறைவுசெய்த மாணவர்கள் தங்களின் இடைநிலைக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு இடைநிலைக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்காக நட்டாங்கண்டல், பாண்டியன்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கே செல்ல வேண்டியுள்ளது. இந்தப் பாடசாலைகளுக்கான இடைவெளி சுமார் 13 கிலோமீற்றராக உள்ள போதிலும், சீரான போக்குவரத்தை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் மாணவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. அத்துடன் வீதியும் படுமோசமான நிலையிலேயே உள்ளது. இதையடுத்தே சிறாட்டிக்குளம், பாலைப்பாணி ஆகிய பாடசாலைகளில் ஆரம்பக்கல்வியை நிறைவுசெய்த மாணவர்கள் கல்வியிலிருந்து இடைவிலகும் தன்மை அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கிலுள்ள பாடசாலை மாணவர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு, பேருந்துச் சேவைகளை முன்னெடுக்குமாறு பிரதேச, மாவட்ட மட்டங்களில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக, கோரிக்கைகள் விடுத்தபோதும் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறு போக்குவரத்து வசதியின்மையால் மாணவர்கள் இடைநிலைக் கல்வியைத் தொடர முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. எனவே குறித்த பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்குப் பேருந்து சேவைகளை மேற்கொள்ள உயரதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதன் மூலமே மாந்தை கிழக்கின் பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகுவதைத் தவிர்க்கமுடியும் என்று மாந்தை கிழக்கு பொது அமைப்புகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன. (ப-13)

# இடியன் வெடித்து ஒருவருக்கு காயம்!

யாழ்., மார்ச் 14
தென்மராட்சி, எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடியன் துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார். சிவயோகநாதன்தனுராஜ் என்பவரே காயமடைந்துள்ளார் என கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-100)

## உடைமையில் கசிப்பு

# பெண்ணுக்கு தண்டம்

கோப்பாய், மார்ச் 14
கோப்பாய்ப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், 3 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டின்கீழ் கைதான பெண்ணுக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ப-26)

# இளைஞர் மீது தாக்குதல் ஐந்து பேருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், மார்ச் 14
இளைஞர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஐந்து பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய்ப் பொலிஸ் பிரிவில் சில தினங்களுக்கு முன்பு, வீதியால் சென்ற இளைஞர் மீது தாக்குதல் நடத்தியமைக்காக அந்தப்பகுதியைச் சேர்ந்த 5 நபர்கள் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் ஐவரும் தன்னை வாள்களுடன் அச்சுறுத்தியதோடு கடுமையாகத் தாக்கினர் எனவும் பாதிக்கப்பட்ட இளைஞர் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார். இதையடுத்து கைதான ஐவரையும் எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் லெனின்குமார் உத்தரவிட்டார். (ப-26)

# வெங்காய இறக்குமதி விரைவில்

யாழ்., மார்ச் 14
இளஞ்சிவப்பு எனப்படும் நடுத்தர அளவிலான வெங்காயத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பெரிய வெங்காய ஏற்றுமதியை பாகிஸ்தான் நிறுத்தியதால், நாட்டில் பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது. இதையடுத்தே வெங்காய இறக்குமதியை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# காட்டுவிநாயகருக்கு மகா கும்பாபிஷேகம்

வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு, முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வெள்ளைக்கை நாச்சியாரால் வழிபட்டதும் பரராசசேகர மன்னரால் பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதுமான முள்ளியவளை காட்டுவிநாயகப்பெருமானுக்கு ஒன்பது தளங்கள் கொண்ட இராஜகோபுரம் புதிதாக அமைக்கப்பட்டு, புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இன்று ஆரம்பமாகும் கும்பாபிஷேகக் கிரியைகள் பிள்ளையார் வழிபாட்டுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 17,18,19ஆம் திகதிகளில் எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் இடம்பெற்று, எதிர்வரும் 20ஆம் திகதி காலை 9.30 மணிதொடக்கம் 11.30 மணிவரையுள்ள சுப நேரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-19)



# ‘இந்துக்களின் போர்’ நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 14
‘வடக்குக்கும் தெற்குக்குமான இந்துக்களின் போர்’ என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 13ஆவது கிரிக்கெட் ஆட்டம் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்த வருட ஆட்டம் நடைபெறவுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் முழுமை பெற்றுள்ளன.

கடந்த வருடம் இடம்பெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் விவகாரங்களில் இலங்கை தரம்தாழ்வு!

'சிவிகஸ்' அமைப்பு அறிக்கை

**யாழ்ப்பாணம், மார்ச் 14**

**'சிவில் இடைவெளி' தொடர்பான தரப்படுத்தலில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கை 'ஒடுக்கப்பட்டுள்ளது' எனும் நிலைக்குத் தரமிறக்கப்பட்டுள்ளது என்று 'சிவிகஸ்' எனும் சர்வதேச சிவில் சமூக அமைப்பு தெரிவித்துள்ளது.**

உலகளாவிய ரீதியில் சிவில் சமூக அமைப்புகளின் செயற்பாடுகள் மற்றும் சிவில் சமூக இடைவெளியை வலுப்படுத்துவதை முன்னிறுத்தி தென்னாபிரிக்காவைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் சிவில் சமூக அமைப்புகளின் கூட்டிணைவான 'சிவிகஸ்' அமைப்பால் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மற்றும் சிவில் சமூகச் செயற்பாடுகளுக்கான இடைவெளி தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிகாரிகளால் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒடுக்கப்படல், ஊடகவியலாளர்கள் மீதான ஒடுக்குமுறைகள், சிவில் செயற்பாட்டாளர்கள் இலக்குவைக்கப்படல் மற்றும் பொறுப்புக்கூறலின்மை என்பன இலங்கை தரம் தாழ்த்தப்படக் காரணமாக அமைந்துள்ளன.

அதேவேளை கடந்த 2022ஆம் ஆண்டு பரந்துபட்ட அளவிலான போராட்டங்களுக்கு வழிகோலிய பொருளாதார நெருக்கடி தற்போதும் தொடர்கின்றது. அதுமாத்திரமன்றி மிகமோசமான கடன்நெருக்கடியின் விளைவாக சர்வதேச நாணயநிதியத்தினால் விதிக்கப்படும் சர்ச்சைக்குரிய நிபந்தனைகளுக்கு முகங்கொடுத்திருக்கும் 22 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



## போதையில் சாரத்தியம் ரூ.25,000 தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இளைஞனுக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த இளைஞன் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே யாழ்ப்பாணம் நீதிவான் அ.ஆனந்தராஜா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் இரண்டு மாதங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்துமாறும் கட்டளையிட்டார். (ச-26)

## வீட்டுத் தோட்டங்கள் ஊக்குவிப்பதற்கு நிதி

கொழும்பு, மார்ச் 14

வீட்டுத் தோட்டங்களில் ஈடுபடுவோருக்கு நிதியுதவியைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோரின் ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மருந்து சிக்கி சிறுமி சாவு!

தொண்டையில் மருந்து சிக்கியதில் நான்கு வயது சிறுமி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் மஹியங்கனையில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. காய்ச்சலுக்காகக் கொடுக்கப்பட்ட மருந்தே சிறுமியின் தொண்டையில் சிக்கி அவர் உயிரிழப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது. (ச-இ)



# ஏற்றாது செல்லும் பஸ்கள் வழிமறித்து ஏற்றும் அவலம்

ஆளுநர் தலையீடு வேண்டும் என முகமாலை மக்கள் கோரிக்கை

பாடசாலை மாணவர்களை ஏற்றாது அரச பேருந்துகள் பயணிக்கும் நிலையில், பேருந்துக்கு குறுக்காக மோட்டார் சைக்கிளை நிறுத்தி, பேருந்தை மறித்து மாணவர்களை ஏற்றியனுப்ப வேண்டியிருப்பதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கிளிநொச்சி - முகமாலை பகுதியில் அரச பேருந்துகள் ஏற்றாது விட்டுச்செல்கின்றன. நீண்டகாலமாக இந்தப் பிரச்சினை தொடர்கிறது. இதனால் பாடசாலைக்கு உரிய நேரத்துக்கு மாணவர்கள் போக முடியாத நிலை காணப்படுகிறது. சில சமயங்களில் மன உளைச்சலுக்குள்ளாகி மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் விடும் சூழலும் காணப்படுகிறது. இதனால் எழுதுமட்டுவாழ் தொடக்கம் இயக்கச்சி வரையான சுமார் எட்டுக்கும் மேற்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

எனவே, மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பேருந்துச் சேவை சீர்செய்யப்படவேண்டும். இந்த விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் நேரடியாக தலையிட்டுசெய்து, உரிய தீர்வை வழங்கவேண்டும் என்று மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதினம் தெரியுமோ?

**கா**டெல்லாம் களனியான காலம் போய், களனியெல்லாம் கட்டடக்காடா மாறுற காலம் இப்ப. எங்க பார்த்தாலும் ஒரே கட்டடவேலைதான். இப்பிடியே போய்க்கொண்டிருந்தால் கொஞ்சக்காலத்தில வடக்கில தோட்டம் செய்ய காணியைக் கண்டு பிடிக்கிறதே பெரும்பாடா மாறிடும். கட்டடம் கட்ட அனுமதி குடுக்கிறவையும் உள்ளால ஏதும் வாங்கிக் கொண்டு கண்ணைமூடிக் கொண்டு இருக்கிறதால, நல்ல தறை எல்லாம் நாலுமாடிக்கட்டடமா மாறுது. சரி, அப்ப கட்டடம் ஒண்டும் கட்டாமல் இப்பிடியே இருக்கவேணுமோ? எண்டு எதிர்க்கேள்வியும் ஆரும் கேப்பினம். நல்ல கேள்விதான். ஆனால் தோட்டம், வயல் எண்டு எங்கட பசியைப் போக்கிறதுக்கெண்டு இருக்கிற வளமான காணியளை விட்டிட்டு, புல் பூண்டு வரப் பஞ்சிப்படுற தரிசு நிலங்களில கட்டடங்களைக் கட்ட அனுமதி குடுத்தால், அந்த வாழாவெட்டித் தரிசுகளுக்கும் வாழ்வு கிடைக்கும், தோட்டக் காணியளும் தப்பிப்பிழைக்கும்.

கிட்டடியில வடக்கில முதன்முறையா ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பு (பிளட்ஸ் ) ஒண்டு கட்டுப்படுறதா தகவல் அறிஞ்சிருப்பியள். ஆனால் உண்மையில வடக்கில முதலாவது அடுக்குமாடிக் குடியிருப்பு எண்டால், குருநகரில உள்ள அஞ்சு மாடிக்குடியிருப்புத் தான். கொழும்பில 'பிளட்ஸ்' வாழ்க்கைதான் சகஜம். ஆனால் இஞ்ச அப்பிடியில்லை. குருநகரைத் தவிர வேற எங்கையும் 'பிளட்ஸ்' வடக்கில இல்லை. வருங்காலத்தில இஞ்சயும் காணித்தட்டுப்பாடு வந்திடும் எண்டு நினைச்சோ என்னவோ, தரிசுக் காணி ஒண்டில இந்த 'பிளட்ஸை' தனியார் கட்ட வெளிக் கிட்டவை. பரவாயில்லையே, தோட்டக் காணியளை விட்டிட்டு இப்பிடி தரிசுக்காணியை 'பிளட்ஸ்' ஆக்கி நல்லவேலை செய்யினம் எண்டு பார்த்தால், அதுக்கையும் கனக்க விளையாட்டுகள் நடக்குதாம்.

அந்த 'பிளட்ஸ்' கட்டுப்படுற காணிக்குள்ள வகைதொகையா பனை மரங்கள் நிண்டது. அதுகளைக் காணியைத் துப்புரவு செய்யேக்க அந்தப் பனை மரங்களை எல்லாம் வெட்டி, காணிக்குள்ள புதைச்சு, அதை நிரப்பி, அதுக்கு மேலதான் கட்டடம் கட்டுப்படுகுதாம். அப்பிடி மரத்தைப் புதைச்சு நிலத்தை உயர்த்தினால், பிறகு அங்க மரம் உக்கத் தொடங்க பள்ளம் வந்தால், அந்தக் குடியிருப்புக்கும் ஆபத்து. அதைவிட இப்பிடி வகைதொகையா பனைமரங்களை வெட்டி விழுத்த ஆர் அனுமதி குடுத்தது எண்டு இதுவரைக்கும் தெரியேலை.

அதைவிட 'பிளட்ஸ்' கட்டுற இடத்துக்கு கிட்ட இருந்த நீரேந்துப் பகுதிகளில கிடந்த மணலை ஓர் அனுமதியும் இல்லாமல் அள்ளிக்கொண்டு போய், இந்தத் திட்டத்துக்குப் பொறுப்பானவரின்ர இன்னொரு காணிக்குள்ள பதுக்கி வைச்சிருக்கினம். அந்தக் காணியும் இதுக்குப் பக்கத்திலதான் இருக்குது. எங்கயிருந்து மணலை அள்ளிச்சினமோ அந்த இடங்களை நிரப்பித் தாறம் எண்டு உந்த 'பிளட்ஸை'க் கட்டுற கொம்பனிக்காரர் சொன்னவையாம். ஆனால் இன்னமும் அப்பிடி ஒண்டையும் அவை நிரப்பேலை எண்டு சனங்கள் குறைப்படுகினம். அதைமாதிரி, இந்த 'பிளட்ஸை'க் கட்ட விட்டால், அல்லைப்பிட்டி றோட்டில 200 மீற்றர் தூரம் காப்பெற் போட்டுத்தாறமெண்டும் உதே கொம்பனியால சொல்லுப்பட்டிருக்கு. அதையும் அவை செய்யக் காணேலை. ஒரு நல்ல திட்டத்தைச் செய்யேக்க அதைக் குறையில்லாமல் செய்தால், இன்னும் எல்லாரும் வரவேற்பின மெல்லோ.

-பட்சி

padsi@uthayan.com

# மரதன் ஓட்டப்போட்டி திடீர் இடைநிறுத்தம்!

## பெற்றோர், மாணவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

மன்னார், தோட்டவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையால் நடத்தப்படவிருந்த மரதன் ஓட்டப்போட்டி எவ்வித அறிவித்தலும் இன்றி திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளமையைக் கண்டித்து பெற்றோர், மாணவர்கள் பாடசாலையின் முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



பாடசாலை வருடாந்த மெய்வன்மைப் போட்டியின் ஒரு பிரிவாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மரதன் ஓட்டப்போட்டி நடைபெறுவதாக இருந்தது. காலை 5 மணியளவில் போட்டியை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில், போட்டியை நடத்த அதிபரோ அல்லது ஆசிரியர்களோ சம்பவ இடத்துக்கு வரவில்லை. அதனால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி மரதன் ஓட்டப்போட்டி நிறுத்தப்பட்டது.

இதையடுத்தே பாடசாலைக்கு முன்பாக வீதியை மறித்து மாணவர்களும், பெற்றோரும் நலன் விரும்பிகளும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பில் மன்னார் கல்வித் திணைக்கள அதிகாரிகளின் கவனத்துக்கும் பெற்றோர் விடயத்தைக் கொண்டுசென்றனர்.

சம்பவ இடத்துக்கு வந்த மன்னார் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப.சந்தியோகு மற்றும் வலயப் பிரதிநிதி பிறின்ஸ் டயஸ் ஆகியோர், மன்னார் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாண கல்வி செயலாளர் ஆகியோரின் கவனத்துக்கு விடயம் கொண்டுசெல்லப்பட்டு தீர்வு பெற்றுத்தரப்படும் என்று உறுதி வழங்கியதையடுத்து போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. (ச-60)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் சில பிரச்சினை ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறுசிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். இலாபம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். சிரமங்களைக் குறைத்துக்கொள்ளலாம்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படும். வியாபாரத்தில் போட்டியாளர்களின் தொல்லை நீங்கும்.

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். சங்கடங்கள் நீங்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். முக்கியமான பிரமுகர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். பிணக்குகள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போல நடைபெறும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அதே நேரம் செலவுகளும் அதிகரிக்கும். காரியம் முடிவது இழுபறியாகும். நல்ல தகவலால் மகிழ்ச்சி அடைவீர்கள். திருப்பம் ஏற்படக்கூடும். அம்பிகையை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். நன்மை ஏற்படும். வியாபாரத்தில் சக வியாபாரிகளால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகும். பணிகளிலும் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். செலவுகள் ஏற்படும். உறவுகள் உதவி கேட்டு வருவார்கள்.

## வேள்வித் திருமகன்

# திருப்பாடுகளின் காட்சி 21 ஆம் திகதி ஆரம்பம்!


கோப்புப்படம்

திருமறைக் கலாமன்றத்தால் அரை நூற்றாண்டைக் கடந்து வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான திருப்பாடுகளின் காட்சி இவ்வாண்டு 'வேள்வித் திருமகன்' என்னும் பெயரில் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து பிரமாண்டமான படைப்பாக தயாரித்தளிக்கும் திருப்பாடுகளின் நாடகத்தை ஆண்டுதோறும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றார்கள்.

திருப்பாடுகளின் அரங்கமரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் இவ்வாற்றுகையை காலத்திற்கேற்ற அரங்க நுட்பங்களை, சிந்தனைகளை உள்வாங்கி புதிய புதிய பார்வைகளுடன் மேடையேற்றி வந்துள்ளது. இம்முறை மேடையேற்றப்படும் 'வேள்வித் திருமகன்' திருப்பாடுகளின் காட்சி முதன்முதலாக 2012ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2014ஆம், 2016ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது நான்காவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது. இம்முறை இதற்கான நெறியாள்கையை மன்ற அரங்கக் கலைஞரான தை.யஸ்ரின் ஜெலூட் மேற்கொண்டுள்ளார்.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரியசேவியர் அடிகளார் திருப்பாடுகளின் அரங்கப் பாரம்பரியத்தினை தமிழ் மரபுக்குரிய தனித்துவங்களுடன் வளர்த்து வந்துள்ளார். திருப்பாடுகளின் நாடகத்துக்கான பெரும்பாலான பிரதிகளை நீ.மரியசேவியர் அடிகளாரே எழுதியுள்ளார். அவரால் இறுதியாக எழுதப்பட்ட பிரதியே 'வேள்வித் திருமகன்'. மரியசேவியர் அடிகளாரால் எழுதப்பட்ட திருப்பாடுகளின் நாடகப் பிரதிகளில் இருந்து மொழிநடையிலும், பொருள் அளிக்கையிலும் சற்று மாறுபட்டதாக எழுதப்பட்ட இந்தப் படைப்பு வேள்விக் கருவை மையப்படுத்தியதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வழமைபோலவே பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களின் பங்கேற்புடன் 'வேள்வித் திருமகன்' அரங்கேறத் தயாராகின்றது. (ம)

## மெய்வன்மை

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். மயிலணி சைவமகா வித்தியாலயத்தின் மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி, மயிலணி முருகமூர்த்தி ஆலய முன்றிலில் பாடசாலை அதிபர் பா.பார்த்தீபன் தலைமையில் இன்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வலிகாமம் வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.கலாதீபன் பிரதம விருந்தினராகவும், யாழ். சில்லாலை றோ.க.த.க. பாடசாலை அதிபர் திருமதி ஏ.சண்முகநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-66)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

வீமன்காமம் வடக்கு, குருந்தடி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டுச் சிறப்புச் சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 30ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் மாலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப)

# கூ.பணியாளர்களுக்கு ரூ.5000 கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான 5 ஆயிரம் ரூபா சம்பள உயர்வை கூட்டுறவுச் சங்கங்கள் நடைமுறைப்படுத்தியுள்ளன.

அரசாங்கத்தின் கடந்த வரவு- செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான 5 ஆயிரம் ரூபா சம்பள உயர்வை கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும் வழங்குவதற்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தீர்மானம் மேற்கொண்டது.

அதற்கமைய கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக் கொடுப்பனவு மாதாந்தக் கொடுப்பனவுடன் இணைத்து வழங்கப்பட்டுள்ளது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# புதிதாக முளைத்த குற்றச்சாட்டுகள்

**வெ**டுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டிய பொலிஸார் பக்கச் சார்பாகவே தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர். அந்தத் திணைக்களத்தின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை தொடர்ந்தும் இழக்கப்பட்டு வருகின்றது. வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயச் சம்பவத்தை, தனியே ஒரு கோயில் விவகாரமாகப்பார்க்க முடியவில்லை. மாறாக சிங்கள-பௌத்த பேரினவாதத்தை நடைமுறைப்படுத்தும் சிறிலங்கா அரசாங்கங்களின் சிந்தனைப் போக்கை செயலுருப்படுத்தும் அதன் திணைக்களங்களின் அதிகாரத்தை வைத்து என்ன வேண்டுமானாலும் செய்யமுடியும் என்ற கோணத்தில்தான் தமிழ்மக்கள் பார்க்க வேண்டியுள்ளது.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட 8 பேருக்கு எதிராகவும் தொல்பொருள் சின்னங்களைச் சேதப்படுத்தியதாக வழக்குத் தாக்கலாகியுள்ளது. அது சோடிக்கப்பட்ட வழக்கு என்று தமிழ் அரசியல்வாதிகள் பலரும் சொல்கின்றனர். அது சோடிக்கப்பட்ட வழக்குத்தான் என்பதும் எல்லோருக்கும் தெரியும். இவர்கள் 8 பேரும் கைது செய்யப்பட்டமை தொடர்பில் பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்ட அறிக்கையில், 'தொல்லியல் பிரதேசத்தில் பகல் நேரத்தில் சாதாரணமாக நடத்தப்படும் வழிபாட்டுப் பூசைகளுக்கு மேலதிகமாக விசேட பூசைகள் நடத்துவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என கடந்த 6ஆம் திகதி தொல்பொருள் பதில் பணிப்பாளரால் வட மாகாண மூத்த பொலிஸ்மா அதிபரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே கடந்த 8ஆம் திகதி சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள், தொல்லியல் பிரதேசத்தில் பணியில் அமர்த்தப்பட்டனர். ஆயினும், தொல்லியல் பிரதேசத்தில் மஹா சிவராத்திரி தினத்தன்று 500 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வருகை தந்து சாதாரணமாக பூசை வழிபாடுகள் செய்தனர். இரவு நேரத்தில் தொல்லியல் பிரதேசத்தில் பூசகர்கள் மற்றும் 40 பேரை கொண்ட குழுக்களால் நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி தொல்பொருள் திணைக்களம் அல்லது வனப் பாது காப்புத் திணைக்களத்தின் அனுமதியின்றி இரவு நேரத்தில் யாகம் செய்து விசேட சிவராத்திரி பூசைகள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரவுக் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவ்வாறு செய்யவேண்டாம் எனத் தெரிவித்தபோதிலும் அவர்கள் அதனையும் மீறித் தொடர்ந்து செயற்பட்டதுடன், நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக வனப் பிரதேசத்தினுள் யாக பூசைகள் நடத்துவதன் ஊடாக தீ ஏற்பட்டு, அழிவடைவதற்கான சந்தர்ப்பம் உள்ளதால் வனப் பிரதே சத்தில் அத்துமீறி பிரவேசித்தமை மற்றும் சட்ட முரணான வகையில் ஒன்று கூடிய மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனும் குற்றத்தின் கீழ் பிரதான பூசகருடன் 8 பேரை பொலி ஸார் கைது செய்துள்ளனர்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் வவுனியா நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, தொல்லியல் சின்னங்களைச் சேதப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டே பிரதானமாக முன்வைக்கப்பட்டுள்ளது. 9 ஆம் திகதி வெளியிடப்பட்ட பொலிஸ் ஊடக அறிக்கையில் சொல்லப்பட்ட குற்றச்சாட்டைவிட புதிய குற்றச்சாட்டு புகுத்தப்பட்டுள்ளது. அதுவும் இலகுவில் பிணையில் வெளியில் வரமுடியாத குற்றச்சாட்டு செருகப்பட்டுள்ளது.

இதே வெடுக்குநாறிமலைஆலயத்தில் விக்கிரகங்கள் அடித்து நொருக்கப்பட்டபோது தொல்லியலுக்கு ஏற்படாத சேதம் இப்போது அமைதியாக வழிபாடு நடத்திய போதுதான் ஏற்பட்டதா? ஆலய நிர்வாகத்தால் அடுப்பு எரிக்கப்பட்ட பிரதேசத்தைத்தாண்டி வனப் பிரதேசத்தில் தீ மூட்டப் பட்டமைக்கான அடையாளம் காணப்படுவதாக ஊர் மக்கள் தெரிவித்திருந்தனர். இது ஆலய நிர்வாகத்தை வழக்கில் சிக்க வைப்பதற்கான சதி முயற்சி என்ற கோணத்தில் அவர்கள் சந்தேகம் வெளியிட்டிருந்தனர். மக்கள் சந்தே கப்பட்டது சரிதான் என்பதையேஇப்போது நடக்கும் காரியங்களும், பொலிஸாரின் புதிய குற்றச்சாட்டுகளும் நிரூபித்து நிற்கின்றன. ஓர் இனத்துக்கு எதிராக தொடர்ந்து முன்னெடுக்கும் இத்தகைய குரோதங்களும், திட்டமிடப்பட்டு புனையப்பட்ட குற்றச்சாட்டுகளும், கைதுகளும் நாட்டில் மீண்டும் ஒரு குருதிச் சகதிக்கே வழி வகுக்கும்.




# இந்திய நிதியுதவியில் வடக்கில் அபிவிருத்தி

## ஆளுநர் அலுவலகத்தில் கலந்துரையாடல்

**யாழ்ப்பாணம், மார்ச் 14**

**வடக்கு மாகாணத்தில் காணப்படும் சுற்றுலாத் தலங்களை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இலங்கைக்கான இந்திய பதில் தூதுவர் கலாநிதி சத்வஞ்சல் பாண்டே உள்ளிட்ட குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.**



பலாலி விமான நிலைய அபிவிருத்தி, சென்னையிலிருந்து பலாலிக்கான விமானசேவையை அதிகரித்தல், காங்கேசன்துறைக்கும் தூத்துக்குடிக்குமான பயணிகள் கப்பல்சேவை போன்ற திட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன. அத்துடன் இயற்கைச் சக்தி வளங்களைப் பயன்படுத்தி மின்னுற்பத்தியை மேற்கொள்ளுதல் மற்றும் வடக்கில் முன்னெடுக்கக்கூடிய ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஆளுநருடன் கலந்துரையாடப்பட்டன.

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதரக கொன்சியூல் ஜெனரல் சாய் முரளியும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார். (ஒ-26)

## 72 நாள்களில் 30 துப்பாக்கிச்சூடு

கொழும்பு, மார்ச் 14

2024ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 12 வரையான 72 நாள்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 30 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்தச் சம்பவங்களில் 21 பேர் உயிரிழந்துள்ளனர். 14 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும்பிரதிப்பொலிஸ் மா அதிபருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (ச-இ)

## உயர்ந்தது வெப்பநிலை

நாட்டில் தற்போது நிலவும் அதிகூடிய வெப்பநிலை, எச்சரிக்கை மட்டத்தைவிடத் தாண்டியுள்ளது. சிறுவர், முதியவர் இதுதொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

வெளிக்களத் தொழில்களில் ஈடுபடுபவர்கள் போதுமான அளவு தண்ணீர் அருந்த வேண்டும் என்றும் முதியவர் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களை வீட்டில் வைத்து கவனித்துக் கொள்ளுமாறும் சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## கட்டுநாயக்கவில் புதிய முனையம்!

கொழும்பு, மார்ச் 14

கட்டுநாயக்க விமானநிலையத்தில் புதிய பயணிகள் முனையம் அமைக்கப்படவுள்ளது என்று துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்துமற்றும்விமானசேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## ஜப்பான் அரசிடமிருந்து 1,600 மில்லியன் யென்!

கொழும்பு, மார்ச் 14

ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து ஆயிரத்து 600 மில்லியன் ஜப்பான் யென்னை (3.3 பில்லியன் ரூபா) பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நேரடியான மனிதாபிமான உதவிகளை கிடைக்கச் செய்வதற்காகவே இந்த நிதி வழங்கப்படுகின்றது. (ச-இ)

### நாளை

15.03.2024

வெள்ளிக்கிழமை

பங்குனி – 02

சுபநேரம் : 06.20 -07.50

ராகுகாலம் : 10.30 – 12.20

### நாளொரு நல்வார்த்தை

நீங்கள் உங்களுக்கு
எதைச் செய்யவில்லையோ
மற்றவர்களுக்கு
அதைச் செய்யாதீர்கள்

– கன்பூசியஸ் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்தை குலைக்கும் அடாவடித்தனத்தை நிறுத்துக

## கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வலியுறுத்து

**யாழ்ப்பாணம், மார்ச் 14**

**சிவராத்திரி தினத்தன்று நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் இந்துக்களின் புராதன வணக்கத்தலத்தில் பொலிஸாரால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையையும், வழிபாட்டில் ஈடுபட்டவர்களை மிகவும் கீழ்த்தரமான முறையில் நடத்தியமையையும் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளது.**

இது தொடர்பாக அந்த ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்து சமயம் இலங்கையின் புராதன சமயம் என்பதையும், இந்து சமய பாடல்பெற்ற வணக்கத்தலங்கள் வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல அநுராதபுரம், பொலநறுவை மற்றும் வடமேற்கு, தென் பகுதிகளிலும் பரவலாக உள்ளன. கிறிஸ்தவ சகாப்தத்துக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இந்துசமயம் இலங்கையில் இருந்து வந்தது என்பதையும், இந்து சமயத்திலிருந்து தோற்றம் பெற்று அதன்பின்னரே பௌத்தம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது என்ற வரலாற்று உண்மைகளையும், முன்னர் இருந்தே இருந்துவந்த இந்து சமய அடையாளங்களை பௌத்த அடையாளங்கள் எவ்வாறு ஆக்கிரமிக்க முடியும் என்பதையும் புத்திஜீவிகள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

ஆட்சியாளர் மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் இதுபோன்ற அடாவடித்தனமான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த அர்ப்பணிப்புடன் செயற்படாவிட்டால், நாட்டின் சுபீட்சத்துக்குத் தேவையான உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது- என்றுள்ளது. (எ-இ)

# வெடுக்குநாறிமலை அடாவடி இனஅழிப்பின் பிரதிபலிப்பே!

### மணிவண்ணன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 14

வெடுக்குநாறிமலையில் பக்தர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தன செயற்பாடு தமிழர்கள் மீதான அப்பட்டமான திட்டமிட்ட கலாசாரப் பண்பாட்டு இன அழிப்பின் பிரதிபலிப்பாகும். இதற்கெதிராக தமிழர்கள் ஒன்றுபட்டு போராட வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று யாழ். மாநகரசபை முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான மணிவண்ணன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில் உள்ளதாவது:

தமிழர்களின் மிகத் தொன்மையான வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவபக்தர்களின் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு சிவராத்திரி வழிபாட்டுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் சிவபக்தர்கள் மீது தாக்குதல் நடத்தி வலுக்கட்டாயமாக கைதுசெய்துள்ளதுடன் பூசைப்பொருள்களையும் தூக்கிவீசியமை மிலேச்சத்தனமான காட்டுமிராண்டித்தனமாகும்.

பிக்குகள் மற்றும் சிங்கள மக்கள் அவ்விடத்துக்குச் செல்கின்றபோது பாதுகாப்பு வழங்குகின்ற பொலிஸார், தமிழர்கள் மீது அடக்குமுறைகளை பிரயோகிக்கின்றனர். இது தமிழர்கள் மீதான அப்பட்டமான திட்டமிடப்பட்ட கலாசாரப் பண்பாட்டு இன அழிப்பாகும். இவ்வாறான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகளுக்கெதிராகவும் மரபுசார் வழிபாட்டுரிமைக்காகவும் தமிழர்கள் ஒன்றுபட்டு போராடவேண்டியது கட்டாயமாகும் - என்றுள்ளது. (ச-26)

# முட்டைவிலை யாழில் சரிவு!



யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். மாவட்டத்தில் முட்டையின் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் ஒரு முட்டை 58 ரூபா முதல் 65 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட நிலையில் தற்போது 46ரூபாமுதல்50ரூபாவரைகுறைவடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-66)

# மஹிந்த ராஜபக்ச உலகத்தலைவர்!

### சந்திரசேன புகழாரம்

கொழும்பு, மார்ச் 14

புலிகளைத் தோற்கடிக்கவே முடியாது என முழு உலகமும் கூறியவேளை அதைச் செய்துகாட்டியவர்தான் மஹிந்த ராஜபக்ச. அவர் உலகத்தலைவர். ஆசியாவில் உள்ள அனுபவம்மிக்க தலைவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார் பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.சந்திரசேன.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பொதுஜன பெரமுன தேர்தலைக் கண்டு கலக்கமடையாது. எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ளும் வகையில் கிராமிய மட்டத்திலான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. அதேபோல முழு உலகமும் ஏற்றுக்கொண்ட தலைவரான மஹிந்த எமது கட்சித் தலைவராக இருக்கின்றார். 30 வருடகாலப் போரை முடித்தவர் அவர். சிலர் இதனை மறந்திருக்கலாம். பிரபாகரனை மிஸ்டர் என்றுகூட அழைத்தவர்களுக்கு மத்தியில் தனது உயிரைப் பணயம் வைத்து இந்த நாட்டைமீட்ட தலைவர் அவர். அவ்வாறு இல்லையேல் இஸ்ரேல் காஸாவில் நடப்பதுதான் இலங்கையில் தற்போது நடந்துகொண்டிருக்கும் - என்றார். (ம-44)

# மஹிந்த சிறந்த தலைவராக முடியாமல்போனது எதனால்?

### விளக்கமளிக்கிறார் பொன்சேகா

கொழும்பு, மார்ச் 14

கொள்ளை அடிக்காமல், குடும்ப அரசியலுக்கு இடமளிக்காமல் இருந்திருந்தால் இலங்கை அரசியலில் அண்மைக்காலத்தில் உருவான சிறந்த தலைவராக மஹிந்த ராஜபக்ச இருந்திருப்பார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மஹிந்த ராஜபக்ச எனக்கு பல கெடுதல்களைச் செய்தார், எனக்கு எதிராகக் கீழ்த்தரமான நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

கொள்ளை அடிக்காமல், குடும்ப அரசியல் செய்யாமல் இருந்திருந்தால் இலங்கை அரசியலில் அண்மைய காலத்தில் உருவான சிறந்த தலைவராக அவர் இருந்திருப்பார் என நான் நம்புகின்றேன்.

இவ்வாறு நான் கூறுவதால் மஹிந்த பக்கம் சாயப்போகின்றேன் என நினைக்க வேண்டாம். ராஜபக்சாக்களுடன் இனி அரசியல் பயணம் கிடையாது.

அதேபோல ரணிலையும் மதிக்கின்றேன். அவர்தான் என்னை அரசியலுக்குக் கொண்டுவந்தார். ஐக்கிய மக்கள் சக்தி என்பது குடும்பச் சொத்து கிடையாது. நான் எனது ஆதரவாளர்களுடன் இருக்கின்றேன். எனக்கு வாக்களித்த மக்கள் பக்கம் நிற்கின்றேன் - என்றார். (இ-44)

# கோத்தாவின் நூலால் குடும்பத்துக்குள் குழப்பம்



கொழும்பு, மார்ச் 14

கோத்தாபய ராஜபக்ச எழுதியுள்ள நூல் தொடர்பில் பஸில் ராஜபக்ச கடும் சீற்றத்துடன் இருக்கின்றார் என்று ராஜபக்ச குடும்பத்தின் பேச்சாளராகக் கருதப்படுகின்ற ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், மொட்டுக் கட்சியின் தலைமைத்துவத்தை கோத்தாபய ராஜபக்சவுக்கு வழங்கி இருந்தால் கட்சியும் இன்று காணாமல்போய் இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

"கோத்தாபயவின் ஐந்து நூல்களைக் கொள்வனவு செய்தேன். மஹிந்த அண்ணனுக்கு ஒன்றை வழங்கினேன். பஸில் அண்ணனுக்கு வழங்குவதற்குச் சென்றபோது அவர் கோபமடைந்த நிலையில் காணப்பட்டார். இதனால் நூலை வழங்கவில்லை. திரும்பி வந்தேன். கோத்தாபய ராஜபக்சவின் நூல் தொடர்பில் ராஜபக்ச குடும்பம் மகிழ்ச்சியடையக்கூடிய நிலையில் இல்லை" என்றும் அவர் தெரிவித்தார். (இ-44)

# இணைய மோசடிகள் நாட்டில் அதிகரிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கையில் இணைய மோசடிக் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன என்று இலங்கை கணினி அவசர பதிலளிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. இணைய வழியில் தொழில் வாய்ப்பு வழங்குதல், பிரமிட் போன்ற மோசடி, நிர்வாணப் புகைப்படங்களை வெளியிடுவதாக மிரட்டுதல், சமூக ஊடகங்களின் ஊடான மோசடிகள், போலிக் கணக்குகளை உருவாக்குதல், அனுமதியின்றி கணக்குகளுக்குள் பிரவேசித்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் பதிவாகின்றன.

கடந்த ஆண்டில் ஆயிரத்து 609 மோசடிச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டில் ஜனவரி மாதம் 110 சம்பவங்களும், பெப்ரவரி மாதம் 213 சம்பவங்களும், மார்ச் மாதம் இதுவரையில் 100 சம்பவங்களும் பதிவாகியுள்ளன என்றும் அந்த அமைப்பின் சிரேஷ்ட தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரக்குற்றிகளுடன் சிக்கிய லொறிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

பாலை மற்றும் வீர மரக் குற்றிகளை ஏற்றிவந்த இரு லொறிகள் யாழ். மாவட்ட வனவளப்பாதுகாப்புத்திணைக்களத்தால் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளன.

புலனாய்வுத் தகவலுக்கு அமைய நாவற்குழிப் பகுதியில் வைத்து இரு லொறிகளும் வழிமறிக்கப்பட்டுச் சோதனையிடப்பட்டபோதே மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. வாகனங்களின் சாரதிகள் இருவரும், நடத்துநர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-125)


## சேவைநலன் பாராட்டு விழா

யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்

**கமலலோசினி அரியநேசன்**

(இ.ஆ.சேவை - 1 : பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி)



ஆசிரியர்சேவை

- யா/ நவாலி செண்பீற்றஸ் றோ.க.த.க பாடசாலை 1990.03.26 - 2010.02.14.
- யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் 2010.02.15 - 2023.12.03

Congratulations

வாழ்த்துவோர்:
பாடசாலை சமூகம்
யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்

(cs.54365) N-1)

## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்

**இராமலிங்கம் லோகேஸ்வரன்**

(இ.ஆ.சேவை - 11 : பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி, பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா)



ஆசிரியர் சேவை

- யா/ மூளாய் சைவப்பிரகாசா வித்தியாலயம் 01.09.1992 - 31.12.2003
- யா/ பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை 01.01.2004 - 09.05.2011
- மு/ வெட்டு வாய்க்கால் அ.த.க.பாடசாலை 10.05.2011 - 09.05.2013
- யா/ பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை 10.05.2013 - 02.07.2013

அதிபர் சேவை

- யா/ மூளாய் அ.மி.த.க. பாடசாலை 03.07.2013 - 14.03.2021
- யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் 15.03.2021 - 13.03.2024

Congratulations

வாழ்த்துவோர்: பாடசாலை சமூகம்
யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்

## மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 01 . 1973



மறைவு
12 . 03 . 2024

**செல்லையா சற்குணராசா**

கிளிநொச்சி திருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சற்குணராசா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (12.03.2024) அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், மரியமலரின் அன்புக் கணவரும், டிசாந், தேனுஜா, டிலக்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாநிதி, நகுலேஸ்வரன் காலஞ்சென்றவர்களான புஸ்பராசா, ஜெயாநிதி, பிரபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மரியநாயகம் - செல்வமணி தம்பதியரின் அன்பு மருமகனும், மரியதாஸ், யேசுதாஸ், அருள்தாஸ், ஞானதாஸ், உதயதாஸ், மரியசீலி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2024) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருநகர்,
கிளிநொச்சி.

(CS/28180) J-1

தகவல்:
குடும்பத்தினர்
076 575 4056

## காணி விற்பனைக்கு உண்டு

### நெல்லியடி நகரத்தில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- நெல்லியடி நகரத்திலிருந்து 2 km தூரத்தில்
- விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து 500m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடிப்பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பெற்றோல் செற் முன் வீதியில் 2 Km தூரத்தில் நெல்லியடி
- பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2 Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்பு: 071 173 3911 / 076 853 5022

(CS28183)) (N-1)


## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல் 2024

## சாஸ்திரிகூழாங்குளம் கால்நடை தீவன உற்பத்தி நிலையம்

01. வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்துள்ள சாஸ்திரிகூழாங்குளம் கால்நடை தீவன உற்பத்தி நிலையத்தினை 2024 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 2027ம் ஆண்டு பங்குனி 31ம் திகதி வரை நடாத்துவதற்கான கேள்விகள் 2024.03.14 தொடக்கம் 2024.03.28 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2024.03.28 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி **செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா"** என்ற முகவரிக்கும், ஒரு பிரதி **"பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா"** என்ற முகவரிக்கும் இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

03. 2024.03.28ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமாக இருக்க அனுமதிக்கப்படும்.

04. கேள்விதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

05. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமுகமளித்தல் வேண்டும்.

06. வாடகைக்காலம் 2024ஆம் ஆண்டு சித்திரை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 2027ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினை கொண்டதாக இருக்கும்.

07. மாதாந்த கட்டுப்பணங்களை மாதம் முடிந்து ஐந்து நாட்களுக்குள் சபைக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னதாக வாடகைப்பணம் முழுவதும் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தால் விதிக்கப்படும் VAT, NBT என்பனவும் செலுத்தப்படல் வேண்டும்.

08. இக்கால அவகாசத்திற்குள் வாடகைப்பணத்தை செலுத்தத் தவறும் கேள்விதாரரின் வைப்புப்பணம் பறிமுதல் செய்வதுடன், கேள்வி விண்ணப்பம் சமர்ப்பித்து கேள்வியினை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும் கேள்வி வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் அவஉகளது பெயர் கேள்விகோரும் தகுதியுடையவர்களின் நிரலிலிருந்து நீக்கப்படுவதுடன் கறுப்புப் பட்டியலிலும் சேஉத்துக் கொள்ளப்படும்.

09. கேள்வி அறிவித்தலுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாகவே கேள்விகளை அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரத்தில் கொடுக்கப்படும் விபரங்கள் உண்மையாகவும் சரியானவையாகவும் இருப்பதுடன் இவைகளை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பும் கேள்விதாரரைச் சார்ந்தது. கேள்விப்படிவங்களைப் பெற முன்பும் அதற்குப் பின்பும் நிபந்தனைக்குரிய அத்தாட்சியினை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருப்பது அவசியமானது.

10. தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேல் சித்திபெற்ற மாதாந்த கட்டுப்பணத்தினை செலுத்த தவறின் எதுவித அறிவித்தலுமின்றி வாடகை இரத்துச்செய்யப்பட்டு ஒப்பந்த பிணைப்பணத்தினை சபையின் நிதியத்திற்கு மாற்றும் அதிகாரம் சபைக்கு அல்லது செயலாளருக்கு உண்டு.

11. இங்கு அறிவிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒப்பந்த சரத்திற்கு அமைவாகவும் என்னால் காலத்திற்கு காலம் எழுத்து மூலம் விதிக்கப்படும் ஏனைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

12. யாதொரு காரணமும் காட்டாது கேள்வி முழுவதையுமோ, அல்லது கேள்வியின் பகுதியையோ ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கும் எனக்கும் உரிமையுண்டு.

13. உரிய நேரத்தில் கேள்விப்படிவங்களை சமர்ப்பிக்காத கேள்விதாரின் கேள்விப்பிணைப்பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

14. வாடகைக்கு எடுத்தவர் உபகுத்தகைக்கு விடுவது தெரியப்படும் சந்தாப்பத்தில் வாடகை உரிமை இரத்துச் செய்யப்படும்.

15. வாடகை எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

16. மேலே சொல்லப்பட்ட கேள்வி நிபந்தனைகள் அனைத்தையும் ஒப்புக்கொண்டே கேள்விகள் அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாக சமுகமளித்து பெற்றுக்கொள்ளலாம்.

| தொ.இல | விபரம் | மாதவாடகை | கட்டட உடைவுப்பணம், இயந்திர தேய்மான பணம் | கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்வி படிவ கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | சாஸ்திரிகூழாங்குளம் கால்நடை தீவன உற்பத்தி நிலையம் | 25000.00 | 450,000.00 | 25000.00 | 1000.00 |

செயலாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.
2024.03.14

(cr.41903) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

யாழ்நகரில் இருந்து சங்கரத்தைக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது எனது முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுத்த நிற **Bag** ஒன்று தவறிவிட்டது. அதில் அடங்கிய ஆவணங்கள் தேசிய அடையாள அட்டை **(550061368V) Atm Card**, கையடக்க தொலைபேசி மேலும் சில பொருள்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**T.P.: - 077 665 4236**

(cs.54363) (N-1)

# அரசாங்க பாடசாலைகளின் பாடத்திட்டத்தில் திருத்தம்!

யாழ்ப்பாணம், மார்ச் 14

அரச பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்பப் பாடத்திட்டத்தைத் திருத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான முன்னோடித் திட்டம் எதிர்வரும் 19ஆம் திகதிமுதல் ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். அரச பாடசாலைகளின் கல்விமுறையில் தரம் - 8 முதல் 13ஆம் தரங்களுக்கு செயற்கை நுண்ணறிவு தொடர்பான தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு மைக்ரோ சொப்ட் நிறுவனம், அமைச்சுடன் கைகோர்த்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

**வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகம்**

## ஆதனப்பெயர்மாற்ற அறிவித்தல்

**விண்ணப்பதாரர் : சோமசுந்தரம் கமலநாதன்**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 08. எல்லை ஒழுங்கை என்னும் முகவரியில் அமைந்துள்ள பலாலி இறை "மாரக்கம்புரை அல்லது ஏலந்துரை" என்ற ஆதனம் ஆதனப்பதிவேட்டில் ஆதன இலக்கம் 110 என்று காணப்படுகின்றது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி கோவிற்பற்றும் பலாலி இறையும் நிலப்பரப்பு 101 குளி 17. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் V.தேவராஜா அவர்களின் வரைபட இலக்கம் 3469 இன்படி நிலப்பரப்பு 101 குளி 17. ம்

எல்லை கிழக்கு- தன்னிலத்திலிருந்து விடப்பட்ட ஒழுங்கை

வடக்கு- தன்னிலத்திலிருந்து விடப்பட்ட ஒழுங்கையும் ரோட்டும்

மேற்கு - தன்னிலத்திலிருந்து விடப்பட்ட ஒழுங்கை

தெற்கு - திருமதி அன்னம்மா சவரிமுத்துவின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை சோமசுந்தரம் கமலநாதன் என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**

(CS 54369) A-1

## நீங்கா நினைவில் பத்தாம் ஆண்டு



தோற்றம் 23 . 11 . 1935

மறைவு 15 . 03 . 2014

### அருளானந்தம் திரேசம்மா

இறைவா நீர் தந்த எம் அம்மாவுக்காய்
நன்றிக்கரம் குவிக்கின்றோம்
உம் திருப்பாதம் அவர் மகிழச் செய்யும்
புனிதர்கள் சமூக உறவு எம்மை
இணைக்கும் என்ற நம்பிக்கையில்
ஆறுதல் அடைகின்றோம்.


இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக வைத்தியசாலை வீதியிலுள்ள புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் நாளை (15.03.2024) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

**இல. 36/2, கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குடும்பத்தினர்

(CS 54364) J-1

## 14ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



மண்ணில் 08 . 02 . 1923

விண்ணில் 14 . 03 . 2010

### அமரர் சவரிமுத்து தேவசகாயம்

அன்புடனும் பண்புடனும்
எமை வளர்த்து
ஆக்கமும் ஊக்கமும் தந்து
அவனியிலே சீரும் சிறப்புடனும் வாழ
என்றும் எமக்காக வாழ்ந்த தேவனே
தொடர்ந்தும் எமக்காய் வான் வீட்டில் இருந்து
நம்பிக்கை நட்சத்திரமாய்
வழிகாட்டிட வேண்டிநிற்கும்

**இல. 28, றக்கா வீதி,**
**சுண்டிக்குளி.**

என்றும் பசுமை நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(CS/54386) J-1

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : ரதி கலிஸ்ரா பிரான்சிஸ் சேவியர்
சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர் : ஏபிரகாம் பிரான்சிஸ் சேவியர்
முகவரி : கீரியன் தோட்ட வீதி, வட்டாரம் -01. ஆதன இல 22

வட்டாரம் 02. சில்லாலை டச்சு வீதி ஆதன இல: 50 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பண்டத்தரிப்புக் கோவில்பற்று பண்டத்தரிப்பு இறை "மாதாவளவு" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 3 1/2 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் சில்லாலை பண்டத்தரிப்பைச் சேர்ந்த அந்தோனி ஆபிரகாம் பெண் அக்னேசம்மாவுக்கு 21.02.1929ம் திகதிய 1517ம் இலக்க உறுதி மூலமும் 06.09.1938ம் திகதிய 5891ம் இலக்க சீதன உறுதி மூலமும் வந்தடைந்தது. பின்னர் 08.09.2001ம் திகதிய 4355ம் இலக்க உறுதிமூலம் பிரான்சிஸ் சேவியர் ரதி கலிஸ்ராவுக்கு அவரின் சகோதரர்களிடமிருந்து வந்தடைந்தது. பின்னர் 07.05.2005ம் திகதிய 8084 இலக்க உறுதிமூலம் பிரான்சிஸ் சேவியர் ரதி கலிஸ்டாவிடமிருந்து பிரான்சிஸ் சேவியர் றெஜி வெலிஸ்ராவுக்கும் பின்னர் 15.10.2012ம் திகதிய 14604ம் இலக்க உறுதிமூலம் பிரான்சிஸ் சேவியர் றெமி குலிஸ்ராவுக்கும் வந்தடைந்தது. பின்னர் 24.11.2012ம் திகதிய 14720ம் இலக்க உறுதிமூலம் பிரான்சிஸ் சேவியர் றெமி குலிஸ்ராவிடமிருந்து பிரான்சிஸ் சேவியர் ரதி கலிஸ்ராவுக்கு வந்தடைந்தது

**ஆதன விபரம்**

நில அளவையாளர் சி.காசிப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 244 ம் இலக்க 20.06.2001ம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 03 குளி 12.16 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு

| | |
|---|---|
| வடக்கு | - சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை |
| கிழக்கு | - ஒழுங்கை |
| தெற்கு | - ஒழுங்கை |
| மேற்கு | - பேதுறுப்பிள்ளை ஜீவரத்தினத்தின் ஆதனம் |

மேற்குறித்த ஆதனத்தை பிரான்சிஸ் சேவியர் ரதி கலிஸ்ரா என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்களுடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**

## குருதிக்கொடை

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை மருதங்கேணி பிரிவால் நாளை வெள்ளிக்கிழமை குருதிக்கொடை நிகழ்வு நடத்தப்படவுள்ளது. அம்பன் பிரதேச மருத்துவமனையில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறும் குருதிக்கொடை நிகழ்வில் தன்னார்வக் குருதிக்கொடையாளர்கள் பங்கேற்க முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 - 06 - 1947



மறைவு 11 - 03 - 2024

## திருமதி புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை கடந்த (11.03.2024) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநெல்வேலி கணபதிப்பிள்ளை - இரத்தினம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான அராலி சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (அரசு மாஸ்டர் - ஓய்வு பெற்ற சித்திர ஆசிரியர் யாழ் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், தமிழ்ச்செல்வி (கனடா), உமாசெல்வன் ( IT விரிவுரையாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் உடன்பிறவாச் சகோதரியும், இராஜேஸ்வரி யோகேஸ்வரி, யோகேந்திரன், காலஞ்சென்ற இராஜேந்திரன் மற்றும் புவனேந்திரன், விமலேஸ்வரி, அகிலேஸ்வரி, விமலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தினேஸ், பிருந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், பரத், ஸ்ருதி, அட்சரன், ஆத்மிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரநாதன், கதிர்காமநாதன் மற்றும் மல்லிகாதேவி, சங்கரி, சுமதி, பிரேமராஜன், கனகராசா, காஞ்சனா காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், தங்கமணி, தங்கரத்தினம், சிவபாக்கியம், அமரசிங்கம் மற்றும் கணேசலிங்கம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2024) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 11.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40/1 அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் தலைமையில், கல்லூரி மைதானத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளரும், பழைய மாணவருமான சி.சிவபாலவும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.அரசகேசரியும், கல்லூரியின் ஐக்கிய இராச்சிய பழையமாணவர் சங்கப் பிரதிநிதி அ.விமலதாசனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். விக்ரோறியாக் கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டிகள், அதிபர் க.சுலபாமதி தலைமையில் கல்லூரி மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி. ஜோன்குயின்ரஸ், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிமனை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.காந்தசெல்வன், கௌரவ விருந்தினராக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் ச.ஜெயந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-ப-66)

# திருத்தல யாத்திரை

யாழ்ப்பாணம், மார்ச் 14

திருக்கேதீச்சரம் சிவனடியார் திருக்கூட்டத்தினரின் பஞ்ச ஈச்சர திருத்தல யாத்திரை நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை திருக்கேதீச்சரத்தை தரிசித்துவிட்டு முறையே முன்னேச்சரம், கோணேச்சரம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம் சுவாமி தரிசனத்துடன் நிறைவடையவுள்ளது.

ஓய்வுபெற்ற கிராம அலுவலரும் மன்னார் இந்துசமய வளர்ச்சிச் சங்கச் செயலாளருமான வி.செல்வக்குமரனின் நெறிப்படுத்தலில் இந்த யாத்திரை இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-125)

## டிப்பரோடு...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்துக்கு அண்மையில் இந்த விபத்து நடந்துள்ளது.

கிளிநொச்சி மருத்துவமனையில் சடலம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கிளிநொச்சிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, இந்த வீதி கனரக வாகனங்கள் பயணிப்பதற்குரிய இடவசதியற்றது என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டு கின்றனர். அந்தவீதியால் அதிகளவு டிப்பர் வாகனங்கள் வேகமாகப் பயணிப்பதால் விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-எ-113)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 13.02.2024 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

## மாணிக்கம் முருகேசு

(செல்லத்துரை)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (14.03.2024) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (15.03.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

தோற்றம்
26.05.1945

மறைவு
13.02.2024

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளை...

டுள்ளது. திருவையாறு, திருநகர், கிளிநொச்சி நகர், ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளில் இந்த ஒட்டுண்ணி விடப்பட்டது.

விவசாயத் திணைக்களத்தின் பயிர் பாதுகாப்புச் சேவையின் உதவிப் பணிப்பாளர் பிரபாத் நிஷாந்த தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சி உதவிப் பணிப்பாளர் எஸ். இராஜேஸ் கண்ணா, கிளிநொச்சி மாவட்டப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் சூ. ஜெகதீஸ்வரி, பாடவிதான உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ-எ-113)

## இலங்கையில்...

கையில் தெரிவித்துள்ளனர். சீனா 2035 ஆம் ஆண்டளவில் முழுமையாக நவீனமயமாக்கப்பட்ட தேசியப் பாதுகாப்பு மற்றும் இராணுவ படையை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்துகின்றது. 2049ஆம் ஆண்டுக்குள் சீன இராணுவத்தை உலகத்தரம் வாய்ந்ததாக மாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளது. அந்த இலக்கை நோக்கியே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அமெரிக்காவின் புலனாய்வு அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## நெல்...

விபத்துத் தொடர்பான விசாரணைகள் புளியங்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (அ-எ-110)

## பண்ணைக்...

கோப்பாய்ப் பொலிஸார் விசாரணை ஒன்றுக்காக முச்சக்கர வண்டியில் சென்றபோதே விபத்து நடந்துள்ளது. கடலுக்குள் பாய்ந்த முச்சக்கரவண்டி, உழவியந்திரத்தின் உதவியுடன் மீட்கப்பட்டது. (அ-எ-27-66)


## கண்ணீர் அஞ்சலி

அமரர் அருளப்பு அழகரட்ணம்



எமது கூட்டுத்தாபனத்தில் கடமைபுரியும் எமது சக ஊழியர் A.யுவிற்றன் அவர்களின் அன்பு மாமனார் அருளப்பு அழகரட்ணம் அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய முகாமையாளரும்
சக ஊழியர்களும்,
வடபிராந்திய காரியாலயம்
இலங்கை பெற்றோலிய
கூட்டுத்தாபனம்.

## காணிபராமரிப்புச் சேவை

உங்களின் காணிகள், வீடுகள் மற்றும் தென்னம்தோட்டம் என்பவற்றை பராமரித்துத் தரப்படும் உள் நாட்டில் மற்றும் வெளிநாட்டில் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 907 6843

(CS 54361) (N-1)

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள **ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்** எனும் புத்தகசாலைக்கான வேலைவாய்ப்பு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

077 077 6469

(CS 28182) S-1

## அந்தியேட்டி அழைப்பு



மலர்வு 07 02 1930

உதிர்வு 13 02 2024

அமரர்
மாரிமுத்து கந்தையா

**அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (14.03.2024) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

குடும்பத்தினர்

(CS 28181) S-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
29.03.1955

மறைவு
13.03.2024

## ஆறுமுகம் கனகாம்பிகை

சுப்பிரமணியம் வீதி, இடைப்பிட்டி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகாம்பிகை அவர்கள் நேற்று (13.3.2024) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அருளாம்பிகை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஆறுமுகம் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரிய ஆலோசகர்) அவர்களின் பாசமிகு மனைவியும், நிரஞ்சினி (நூலக தகவல் உதவியாளர், யாழ். பல்கலைக்கழகம்), தனாகரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் Habitat for Humanity, புத்தளம்), குகநந்தினி (மருந்துக் கலவையாளர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), லோகாநந்தன் (சுங்கப் பரிசோதகர், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரமேஸ்வரன், காலஞ்சென்ற மகேஸ்வரன், கமலாம்பிகை, விக்கினேஸ்வரன், குகேஸ்வரன், காலஞ்சென்ற வேதாம்பிகை மற்றும் யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னமுத்து, கந்தசாமி (ஓய்வு நிலை நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், வடகிழக்கு மாகாணம்), நமசிவாயம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற மங்கையற்கரசி, மனோன்மணி, சந்திரமதி, சுந்தரலிங்கம், கௌரி, சத்தியராணி, பேராநந்தன், பவாணி ஆகியோரின் மைத்துனியும், கிரிஷா (அபிவிருத்தி உத்தியோகத்தர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்), கமல்குமார் (பொது சுகாதார பரிசோதகர், பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும், டிவேஸ், ருக்ஷிகா, ஜெயகிருஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், மங்கையற்கரசி மற்றும் பராசக்தி, காலஞ்சென்றவர்களான இராமநாதன், தில்லைநாதன் ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் அன்னாரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுப்பிரமணியம் வீதி,
இடைப்பிட்டி,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.
070 701 2689
077 901 2689

(CS 28184) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வன்முறையை எதிர்த்து வெள்ளியன்று போராட்டம்

## வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய பரிபாலனசபை அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14
வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது பொலிஸார் நடத்திய வன்முறைகளை எதிர்த்தும், கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்கக்கோரியும் நாளை 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை பெரும் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்று மு.ப. 10 மணிக்கு நெடுங்கேணிச் சந்தியில் ஆரம்பிக்கப்படும் ஆர்ப்பாட்டப் பேரணி, வவுனியா வடக்குப் பிரதேச செயலகம்வரை சென்று இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி மற்றும் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரங்களுக்கான மனுக்கள் கையளிக்கப்படும் என்று வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது.

அரச அநீதிக்கு எதிரான இந்தப் போராட்டத்தில், அனைத்துத் தமிழ் மக்களும், சமயம் சார்ந்த அமைப்புகளும், தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் உணர்வாளர்களும், சிவில் சமூகத்தினரும், பல்கலைக்கழக மாணவர்களும், ஊடகங்களும் கலந்துகொள்ளவேண்டும் என்று அன்புடன் கோருகின்றோம் எனப் பரிபாலனசபையின் தலைவர் செல்லத்துரை சசிகுமார் அழைப்பு விடுத்துள்ளார். (எ-26-66)

### விடுதலைக்கு...

இவர்கள் மூவருக்கும் சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டை வழங்கும் நடவடிக்கையில் இந்திய ஒன்றிய அரசு பின்னடித்து வருகின்றது என்றும், அவர்களிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்காதவிடத்து தம்மால் கடவுச்சீட்டு வழங்கமுடியாது என்று இலங்கை துணைத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்றும் சட்டத்தரணி புகழேந்தி பாண்டியன் தெரிவித்துள்ளார்.

சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டைப் பெறுவதற்காக இலங்கைத்தூதரகத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் பங்கேற்பதற்கு தமது கணவரை அனுமதிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிடக் கோரி முருகனின் மனைவியான நளினி சென்னை மேல் நீதிமன்றில் நீதிப் பேராணை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு நேற்றுமுன்தினம் மீண்டும் சென்னை மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையில் பங்கேற்ற திருச்சி மாவட்ட ஆட்சியர் முருகன், றொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரை திருச்சியில் இருந்து அழைத்துச் சென்று சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

திருச்சி மத்திய சிறைவளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மூவரும் நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணியளவில் அங்கிருந்து பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கைத் துணைத் தூதரக அலுவலகத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

மூவரிடமும் நேர்முக விசாரணைகள் நடத்தப்பட்டுள்ள நிலையில் சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டை வழங்குவதில் தொடர்ந்தும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது என்று முருகனின் வழங்கறிஞர் புகழேந்தி பாண்டியன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் மூவருக்கும் சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டை வழங்குவதற்கு இந்திய ஒன்றிய அரசு தொடர்ந்து பின்னடித்து வருகின்றது என்றும், அவர்களிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்காதவிடத்து அதனை தம்மால் வழங்கமுடியாது எனவும் இலங்கைத் துணைத் தூதரக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது என்றும் சட்டத்தரணி புகழேந்தி பாண்டியன் தெரிவித்துள்ளார்.

திருச்சி சிறப்பு முகாமுக்குத் திரும்பியதன் பிற்பாடு சிறைத்துறை அதிகாரிகள் ஊடாக சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டைப் பெறுவதற்கான வேண்டுகைக் கடிதத்தை அனுப்பிவைத்தால் அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கைத் துணைத் தூதரக அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட சாந்தனை இலங்கை அனுப்புவதில் இந்திய ஒன்றிய அரசு இழுத்தடித்துவந்தநிலையில், அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். தற்போது சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய மூவரை விடுவிப்பதிலும் இந்திய அரசு முட்டுக்கட்டை போட்டு வருகின்றது. (அ-எ-100)

### கைதானோர்...

திலகநாதன் கிந்துஜன், சுப்பிரமணியம் தவபாலசிங்கம், மதிமுகராசா, துரைராசா தமிழ்ச்செல்வன், விநாயகமூர்த்தி ஆகிய ஐவருமே நேற்றுக்காலையில் இருந்து உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டமைக்காகக் கைது செய்யப்பட்ட 8 பேரும், மறுநாள் 9 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அன்றையதினம் மூன்று தடவைகள் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வெடுக்குநாறிமலையில் உள்ள தொல்பொருள் சின்னங்களைச் சேதப்படுத்தினர் என்று தொல்பொருள் திணைக்களத்தினர் நீதிமன்றில் தெரிவித்தனர். விசாரணைகள் நிறைவுபெறவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். அதையடுத்து அவர்களைக் கைது செய்யப்பட்ட 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நேற்றுமுன்தினம் வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் 5 பேர் தங்களுக்கு நீதி வழங்கக் கோரி உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். நேற்றுமுன்தினம் காலையில் இருந்து அவர்கள் உணவு உட்கொள்ள மறுத்துவருகின்றனர் என்று அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களின் பூர்வீக வழிபாட்டிடமான வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் அடாவடித்தனமாக நடந்துகொண்டு சிவராத்திரி வழிபாடுகளைத் தடுத்து, வழிபாட்டில் ஈடுபட்டவர்களைக் கைது செய்துள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நேற்று மதியம்முதல் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர் என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். (அ-எ-100-18)

### இரத்தக்கறையுடன்...

கடந்த திங்கட்கிழமை காரைநகர் சென்றுவிட்டு மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் வட்டுக்கோட்டை நோக்கிப் பயணித்த இளைஞர் ஒருவர் கார்களில் வந்தவர்களால் [illegible] வெட்டிக்கொலை [illegible] வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தவச்செல்வம் பவிதரன் (வயது-23) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 4 சந்தேகநபர்கள் கிளிநொச்சியில் பதுங்கியிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் வட்டுக்கோட்டை, அராலியைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் 37,32,25,22 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்திருந்தனர். அத்துடன் சந்தேகநபர்களிடம் இருந்து இரு மோட்டார்சைக்கிள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. வட்டுக்கோட்டையிலும் ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர் விசாரணைகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால், கடத்தலுக்கும் கொலைக்கும் பயன்படுத்தப்பட்ட கார் ஒன்று நேற்று அராலி மேற்கு, நொச்சிக்காட்டு பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் இருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. கார் புழுதி படிந்தநிலையில் நீண்டநாள் பயன்படுத்தாததைப் போன்று காணப்பட்டது. காரில் இரத்தக்கறைகள் காணப்படும் நிலையில், தடயவியல் பொலிஸாரால் அந்த இரத்த மாதிரிகள் சோதனைக்காகச் சேகரிக்கப்பட்டுள்ளது. உறைந்தநிலையில் காணப்படும் குருதி கொல்லப்பட்டவருடையதா என்பது தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டவை என்று கருதப்படும் பொல்லுகள், இரும்புக்கம்பிகள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரும், மேலும் சிலரும் தலைமறைவாகியுள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தனர். அதேநேரம், கிளிநொச்சியில் கைதான சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 15ஆம் திகதிவரை பொலிஸ் காவலில் வைத்து விசாரிப்பதற்கு மல்லாகம் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. வட்டுக்கோட்டையில் கைதான ஐந்தாவது சந்தேகநபரை எதிர்வரும் 20ஆம் திகதி அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(அ-எ-26-23-27-125)

### 'எட்காவுக்கு'...

மொன்றை நடத்தி, சங்கப் பிரகடனத்தை வெளியிடுவதற்கு பௌத்த பிக்குகள் தீர்மானித்துள்ளனர்.

இந்தத் தகவலை உறுதிப்படுத்திய மெதகொட அபேதிஸ்ஸ தேரர், மார்ச் 14ஆம் திகதி (இன்று) பிற்பகல் 3 மணிக்கு இந்த சங்கசபைக் கூட்டம் நடைபெறும் என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நரகத்துக்குச் செல்லும் வழிக்கு "காப்பெற்" போட்டாலும் இறுதியில் நரகத்துக்குத்தான் செல்ல வேண்டும். நரகத்துக்குச் செல்லும் வழியில் இரு பக்கங்களிலும் பூ வைத்துக்கொண்டு பயணிப்பது போன்ற சூழ்நிலையே தற்போது காணப்படுகின்றது. முன்னேற்றகரமாக எதுவும் இல்லை.

மறுபுறத்தில் நாளாந்தம் 'விற்பனை' பற்றியே பேசப்படுகின்றது. வீட்டில் 'குடு' (போதைப்பொருள்) அடிப்பவன் இருந்தால் அவன் வீட்டில் உள்ள அனைத்துப் பொருள்களையும் விற்றுவிடுவான், மனைவியின் தங்க நகைகளையும் விற்றுவிடுவான். இறுதியில் வீட்டையும் விற்பனை செய்துவிடுவான். நாட்டு வளங்களின் விற்பனைமூலமே வருமானம் என்ற நிலை நாட்டில் காணப்படுகின்றது. இது பாரதூரமான விடயமாகும்.

மார்ச் 14 ஆம் திகதி விசேட சங்கசபைக் கூட்டமொன்றை நடத்தவுள்ளோம். எட்கா உடன்படிக்கை, விற்பனை, காட்டிக்கொடுப்பு போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தக் கூட்டம் நடத்தப்படுகின்றது. ரணில்விக்கிரமசிங்கவுக்குமக்கள் ஆணை வழங்கவில்லை. கோத்தாபய ராஜபக்சவுக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணையே நடைமுறையில் உள்ளது. அதற்கு எதிராகச் செயற்படுவதற்கு ஆட்சியாளர்களுக்கு தார்மீக உரிமை கிடையாது - என்றார். (அ-எ-44)

### கூரையைப்...

இது தொடர்பாக பிரதேசவாசிகள் இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்று இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தினர் ஆராய்ந்துள்ளனர். வானில் இருந்து இவ்வளவு பெரிய பனிக்கட்டி வீழ்ந்தது இதுவே முதல்தடவை. வறட்சியான காலத்தில் சிறிய பனிக்கட்டிகள் வீழ்வது வழமை. ஆனால், இந்தளவு பெரிய பனிக்கட்டி விழுவது இதுவே முதல்முறை என்று பதுளை இடர்முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் உதயகுமார தெரிவித்துள்ளார்.

வீட்டின் மேற்கூரையில் வீழ்ந்த பனிக்கட்டியால் மேற்கூரை இடிந்து வீழ்ந்துள்ளது. அந்தப் பனிக்கட்டி உருக நீண்ட நேரம் எடுத்தது. இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். (அ-எ-இ)

### பட்டமளிப்பு...

நடைபெறவுள்ளன. பட்டமளிப்பு விழாவில் 2 ஆயிரத்து 873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தமுறை நடைபெறும் பட்டமளிப்பு விழா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு 50ஆவது வருடத்தில் பொன்விழா நிகழ்வுகளின் முக்கியமான நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்சன் தங்கப்பதக்கம் இவ்வாண்டு செல்விக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஆயுததாரிகளால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சகாதேவன் நிலக்சன் ஞாப கார்த்த தங்கப்பதக்கம் இவ்வாண்டு கிருஷ்ணராஜா செல்விக்கு வழங்கப்பட வுள்ளது.

ஊடகத்துறையில் ஆண்டுதோறும் சிறப் புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு இவ் விருது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் வழங்கப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 37 ஆவது பட்டமளிப்பு விழா இன்று ஆரம்பமாகும் நிலையில், இந்த ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறையில் ஊடகவிய லில் திறமைச் சித்தி பெற்ற மாணவியான இரத்தினபுரி மாவட்டத்தில் கொழும்பு காமம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த செல்வி கிருஷ்ணராஜா செல்விக்கு வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்க லைக்கழகத்தில் ஊடக மாணவனா கப் படித்துக் கொண்டு ஊடகவி யலாளராகப் பணி யாற்றிக் கொண்டி ருந்த நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஆவணி மாதம் முத லாம் திகதி ஊர டங்கு வேளையில் அதிகாலை 5 மணி யளவில் அவரது வீட்டில் வைத்து பெற் றோர் முன்னிலையில் ஆயுததாரி களால் படுகொலை செய்யப்பட்டார்.

நிலக்சனது ஞாபகார்த்தமாக அவருடன் யாழ். இந்துக்கல்லூரியில் ஒன்றாக கற்ற 2004 உயர்தர மாணவர்களால் முன்னெடுக்கப்படும் "நிலா நிதியம்" யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட் டமளிப்பு விழாவின் போது ஊடகத்துறை யில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவ ருக்கு ஆண்டுதோறும் வழங்கும்வகை யில், தங்கப்பதக்கத்தை அமரர் சகாதே வன் நிலக்சன் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டு வருகின்றது.

(எ-125)




## காணி விற்பனைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரி நுணாவில் பேச்சி அம்மன் கோவிலடியில் இருந்து 300 m தூரத்தில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

பிரித்தும் கொடுக்கப்படும்.

077 224 7902

(CR/41902) J-1



## தேவை

அரைக்கும் ஆலை வேலை.
பொதி செய்வதற்கு, சாரதிகள்.
மாப்பியன் மில், சுதுமலை.

077 772 2215



## பகுதி நேர வேலையாட்கள் தேவை

யாழ். சுண்டுக்குளியில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பகுதிநேர வேலைக்கு ஆட்கள் தேவை.

- சமையல் உதவியாளர் (பெண்) 50 வயதிற்கு மேல்
- இரவுக் காவலாளி (ஆண்) 50 வயதிற்கு மேல்

தொடர்பு:- 077 717 2039

(CS/54362) J-1



## தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு சுத்திகரிப்பாளர் தேவை.

ஆண்/பெண் இருபாலாரும்.

தொடர்பு:

077 120 9972

A-1



## விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்.


தொடர்புகளுக்கு:

(CS/28175) J-1

074 173 7684


## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 12 . 1990



மறைவு 11 . 03 . 2024

### அமரர் தனபாலசுப்பிரமணியம் சுஜீவன்

கணபதியப்புலம் கோப்பாய் மத்தி கோப்பாயை பிறப்பிடமாகவும் அங்குடுவனை கொல்லங்கலட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசுப்பிரமணியம் சுஜீவன் 11.03.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனபாலசுப்பிரமணியம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு மகனும், தீபவதனா, தணிகா, தர்சிகா, திருக்குமரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அப்பாக்குட்டி, செல்லமுத்து, சின்னத்தம்பி, சின்னத்தங்கம் ஆகியோரின் பாசமிகு பேரனும் தனேசன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாயிசன், தனிஷா, ஹரினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற தனபாக்கியம், முருகையா, நாகரத்தினம் ஆகியோரின் பாசமிகு மருமகனும் வள்ளியம்மை, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

075 651 3960

(CS 28168) V-1

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29.05.1984

மறைவு 03.03.2017

"சின்னத்துரை சிற்பாலயம்" உரிமையாளர்
நந்தகுமாரனின் மனைவி

### திருமதி லக்ஷி நந்தகுமார்


திதி : மாசி மாத பூர்வபட்ச பஞ்சமி

காலங்கள் கொண்டு சென்று
ஏழாண்டுகள் கடந்ததம்மா ஆனால்
காயங்கள் எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் ஆறாதம்மா - எங்கள்
கனவுகள் கலைந்து போனதம்மா
கற்பனை கூட மாறிப் போனதம்மா
கல்லறையில் கூட உறங்குவோமம்மா
கணப் பொழுதில் நீ வந்து தாலாட்டுப்
பாடுவாயா அம்மா?
கண்களோரம் கண்ணீர் வடியுதம்மா
கண்ணீர் துடைக்க நீ வரமாட்டாயா
என மனம் ஏங்குதம்மா

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 03 . 1949



இறப்பு 12 . 03 . 2024

### அருளப்பு அழகரட்ணம்

(யா.ப.நோ.கூ.ச.ஓய்வு பெற்ற முகாமையாளர்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு அழகரட்ணம் (ஓய்வு பெற்ற முகாமையார். யா.ப.நோ.கூ.ச) அவர்கள் நேற்று முன்தினம் (12.03.2024) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தோமஸ் - மாகிறேற் தம்பதியரின் அன்பு மருமகனும், மேரிதிரேசாவின் அன்புக் கணவரும் லீலாமலர், புஸ்பராணி, சதாநாயகி மற்றும் காலஞ்சென்றவர்களான நிற்குணாநந்தம், பேரின்பநாயகி, ஆகியோரின் அன்புச் சகோதரனும், கரோலின் (ஆசிரியர், நாவாந்துறை R.C) செலின் (நெதர்லாந்து), ஈழமாறன் (கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், வடமாகாணம்), காலஞ்சென்ற நொய்லின் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யுவிற்றன் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வடபிராந்திய காரியாலயம்), சந்திரகுமார் (நெதர்லாந்து), இன்பரூபி (MOH பணிமனை, பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கமிலியா (கொழும்பு மருத்துவ பீட மாணவி), டில்சான், டினோசன், ஒலிவியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (14.03.2024) பி.ப 02.30 மணியளவில் யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, உரும்பிராய் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CR 41904) S-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.